

# ELATE இன் COMPUTER TIMES

தமிழ் கணனி சஞ்சிகை KING OF COMPUTER WORLD வெளியீடு 01




* **Kaspersky** காலாவதி ஆவதை தடுப்பது எவ்வாறு?
* **"WiFi"** என்றால் என்ன?






* ஸ்பாம் என்றால் என்ன?
* **online** இல் இலவசமாக **fax** அனுப்ப.....................



* பென்டிரைவிலுள்ள சிக்கல்களை சரி செய்வது எப்படி?
* **Hosting** என்றால் என்ன?
* இணையம் **Internet**
* **IP Address** என்றால் என்ன?



* மல்வேயார்களுடன் *(Malware)* ஒரு யுத்தம்!

# ஆசிரியர் மனதிலிருந்து....................

இந்த தமிழ் கணனி சஞ்சிகை ஊடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இன்றைய மாறிவரும் உலகில் தகவல் தொழில்நுட்பமானது அசுரவேகத்தில் மற்றத்துறைகளை பின்தள்ளி வளர்ச்சி அடைவதை கண் ஊடாகக் காணலாம். இதனால் இன்று எமது இலங்கையை எடுத்துக் கொண்டோமானால் இங்கு பாடசாலைக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சமூகமே கூடுதலாக உள்ளது. இதனால் இன்றைய தொழில்நுட்பமாற்றங்களுக்கு முகங்கொடுக்க முடியாத, இயலாமை தன்மை காணப்படுகிறது. இதனால் வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாம் தொழில்நுட்பத்துறையில் பின்நோக்கி இருப்பதைக்காணலாம். இந்த குறைபாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய வேண்டுமெனின் அனைவருக்கும் நவீன தொழில் நுட்ப செய்திகள் சென்றடைய வேண்டும். ஆனால் செய்திகள் அனைத்து மட்டதினரையும் சென்றடைய ஆங்கில மொழி தடையாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு தமிழ் மொழி மூலம் அனைவருக்கும் விளங்கும் வண்ணமாக இக் கணனி சஞ்சிகையை உருவாக்கியுள்ளோம். இதற்கு தொடர்ந்து உங்கள் ஆதரவு இருக்கும் என்று எதிர்பார்கிறேன்.

பொது நூலகம்
கொக்குவில்

*ஆசிரியர்*

*ப.ஜோன்சன்*

# எலேட்டின் கொம்பியூட்டர் ரைம்ஸ்


**ஆசிரியர்** : **ப.ஜோன்சன்**

**இணைஆசிரியர் மற்றும் எழுத்துருவாக்கம்** : **J.மோகனப்பிரியா**

**அட்டை பட வடிவமைப்பு மற்றும் தொகுப்பு** : **ப.ஜோன்சன்**

**ஆலோசனை** : **K.பரமசாமி, P.தனலட்சுமி**



**தொடர்புகளுக்கு** : **Elate Computer Systems**

: **1048 K.K.S Road Jaffna,Srilanka.**

**Branch** : **92 Hill street Dehiwala.Srilanka**


**Hot Line** : **+94774384353**

**Email** : **elatecomputer@gmail.com**

**Website** : **www.elatecomputer.com**


## உள்ளே......


- **Kaspersky** காலாவதி ஆவதை தடுப்பது எப்படி?
- ஸ்பாம் **(SPAM)** என்றால் என்ன?
- உள்ளங்கையில் கீபோர்டு
- பென்டிரைவில் உள்ள சிக்கல்களை சரிசெய்வதற்கு
- மல்வேயார்களுடன் **(Malware)** ஒரு யுத்தம்
- டிவி க்களில் ஸ்கைப்
- ஒன்லைனில் இலவசமாக பக்ஸ் (**Fax**) அனுப்ப
- உங்கள் கையெழுத்தை **Font** ஆக மாற்றுங்கள்
- **VB** அறிமுகம்
- **"WiFi"** என்றால் என்ன?
- கொம்ப்யூட்டரில் 'செக்' போடுங்க
- இணையம் **Internet**
- மின்னஞ்சல் முகவரியில் **@** என்ற சின்னம் எப்படி வந்தது...?
- **IP Address** என்றால் என்ன?
- மௌஸ் பிறந்து, வளர்ந்த கதை
- **Hosting** என்றால் என்ன?
- அத்துமீறி வீட்டுக்குள் பிரவேசிப்பவர்களை வீழ்த்தும் தொழில்நுட்ப தரை
- குழாய் வழி பயணம் 6 மணித்தியாலங்களில் உலகை சுற்றி வரலாம்




# Kaspersky காலாவதி ஆவதை தடுப்பது எப்படி?

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரை நாம் இலவச மென்பொருள்களின் மீது அளவுகடந்த பாசம் கொண்டுள்ளோம் ஏனெனில் காசு கொடுத்து வாங்குவது என்பது எமக்கு பிடிக்காத செயலாகும் எப்போதுமே இணையத்திலோ அல்லது நண்பர்களிடமோ இருந்து வேறு ஒருவருக்கு சொந்தமான மென்பொருளை சட்டவிரோதமாக பயன்படுத்துவதில் நாம் பெரிய ஜாம்பவான்கள். அந்த வகையில் தான் இதுவும் ஒன்று **Kaspersky** தனது வாடிக்கையாளர்களை 30 நாட்கள் இலைசமாக பரீட்சித்துப்பார்க்க விட்டுள்ளது, இந்த 30 நாட்களும் **Kaspersky** ஆனது காசு கொடுத்து வாங்குவதை போலவே இயங்கும், இந்த முயற்சியின் மூலம் கிடைத்த விடை, நாம் அந்த பரீட்சாத்த மென்பொருளை **(Trial)**, எவ்வளவு நாட்கள் வேண்டுமெண்றாலும் பாவிக்கலாம் இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது 29 நாட்களுக்கு ஒரு முறை தலா 1 நிமிடம் வரை செலவு செய்ய வேண்டும்.

செய்முறை :

***kaspersky** இன் எந்த மென்பொருளையும் நீங்கள் வைத்திருக்கலாம், **(Kaspersky IS, Kaspersky AV)**

1. நீங்கள் பழைய அனுமதி வைத்திருந்தால் **(KEY FILE)** அதை அழித்துவிடுங்கள்
2. **Kaspersky I open** செய்து **Enable Self-Defense** ஐ **Un-tick** செய்யவும்.

**Enable Self-Defense** ஐ **Un-tick** செய்யும் முறை

- **Open the kaspersky**
- **on the right Go to "Settings" hant top corner**
- **you will prompt a box**
- **in the box click the "option Button"**
- **u can see in the right hand side " Enable Self-Defens"**
- **un-tick that**

3. பின்னர் **kaspersky** ஐ **exit** செய்யவும்
**Kaspersky Trial Resetter v1.8.0.0 Final REZMAN1984**
4. **Kaspersky Trial Resetter v1.8.0** ஐ தள இறக்கம் செய்து உங்கள் கணனியின் முகதிரையில் வைத்துக்கொள்ளவும்; **(SAVE ON DESKTOP)**
5. **extract the file (password : kaspersky)**
6. **in the folder u can find kaspersky resetter.exe**
7. **run it**
8. **press "start"**
9. ஒரு 30 நொடி **(sec)** பொறுங்கள்..... உங்களது **Kaspersky** மறுபடியும் செயற்பட்டு உங்களிடம் **Activate** செய்ய கேட்கும்... அப்பொளுது **"Activate Trial vertion"** என்பதை அளுத்துங்கள்.... உங்களது மென்பொருள் 30 நாட்கள் பாவனைக்கு தயாராகிவிடும்...

முக்கிய குறிப்பு :

1. **trial resetter** ஐ வேலை முடிந்தவுடன் அழித்துவிடவும் **(delete the restetter but don't delete the .rar file)**
2. உங்களது **Kaspersky trail** இல் இயங்குகிறது என்று சொல்லும்.. அதை நீங்கள் **"Hide Message"** இல் மறைத்து விடலாம் 29 நாட்களுக்கு ஒருமுறை இதை செய்து கொள்ளவும்.... (29 நாள் தான் என்று கட்டாயம் இல்லை, நீங்கள் விரும்பும் நேரத்திலும் செய்து கொள்ளலாம்) இது **Windows XP**, **Windos 7 Home Premium**, என்பவற்றில் பரீட்சித்து பார்க்கப்பட்டது.

ஆக்கம் P.JOHNSON **(Elate computer Systems)**

# ஸ்பாம் (SPAM) என்றால் என்ன?



இமெயில் கணக்கிற்கு முன் பின் அறிமுகமில்லாதவர்களிடமிருந்து தினமும் உங்களுக்கு வேண்டாத மெயில்களெல்லாம் வந்து குவிந்து உங்கள் மெயில் பொக்ஸை நிரப்புவதைப் பார்த்திருப்பீர்கள். நீங்கள் கேட்காமலேயே உங்களிடம் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு வர்த்தக நோக்கில் வரும் இந்த வேண்டாத மெயில்களையே ஸ்பாம் **(spam)** எனப்படுகிறது. வேண்டாதஇந்தக் குப்பை மெயில் அனுப்புவோரை ஸ்பாமர் **(spamer)** என்பர். இந்த ஸ்பாம் எமக்கு நேர விரயத்தை ஏற்படுத்துவதோடு சில வேளைகளில் வேண்டாத பிரச்சினைகளிலும் சிக்க வைத்து விடுகிறது.

**வர்த்தக நோக்கில் வரும் இந்த ஸ்பாம் மெயில்கள்,**

- எமக்கு அவசியமேயில்லாத பொருட்கள் மற்றும் சேவைகள்
- நம்ப முடியாத விலைக் கழிவுடன் பொருட்கள்
- இழந்த இளமையை மீட்டுக் கொள்ள மருந்து மாத்திரைகள்
- பல்கலைக் கழகம் செல்லாமலேயே பட்டப் படிப்புச் சான்றிதழ்கள்
- மலிவு விலையில் கணனி மென்பொருள்கள்
- இணையம் வழி சூதாட்டம்
- குறுகிய காலத்தில் உங்களை குபேரனாக மாற்றும் திட்டம்
- மற்றும் சட்ட விரோத செயல்களுக்கு உதவுதல் போன்ற தலைப்புகளை **(subject)** கொண்டிருக்கும். இந்த தலைப்பைக் கொண்டே இவை ஸ்பாம் அஞ்சல் என்பதை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

சில வேளை இந்த ஸ்பாம் மெயில்கள் உங்களுக்கு வழமையாக வரும் ஒரு தனிப்பட்ட மெயில் போன்ற தோற்றத்துடன் அல்லது தலைப்புடன் வந்தும் உங்களைத் திசை திருப்பக் கூடும்.

***ஸ்பாம் உண்மையில் எமக்குப் பிரச்சினைதானா?***

கணனி வைரஸ் போல் ஸ்பாம் அஞ்சல்கள் உங்கள் கணனியின் செயற்பாட்டையோ அல்லது டேட்டாவையோ பாதிப்பதில்லை. எனினும் உங்கள் வியாபார நடவடிக்கைகளைப் பாதிப்பதோடு நேர விரயத்தையும் பண விரயத்தையும் கூட உண்டாக்குகிறது.

நீங்கள் தினமும் நூற்றுக் கணக்கான ,மெயில்களை வாடிக்கையாளர்களிடமிருந்து பெறுகிறீர்கள் எனவைத்துக் கொள்வோம். இவற்றுள் எவை ஸ்பாம் மெயில் என்பதைக் கண்டு பிடித்து அழிப்பதில் உங்களது அல்லது உங்கள் அலுவலக ஊழியரது நேரம் வீணாக விரயமாக்கப் படுகிறது. (மிக அரிதாக மின்னஞ்சல் பெறுபவர்கள் வேண்டுமானால் ஸ்பாம்களைப் பார்த்து சந்தோசப்பட்டுக் கொள்ளலாம்.)

சில வேளை எது ஸ்பாம் எனக் கண்டறிய முடியாமல் உங்களுக்கு வந்த ஒரு முக்கிய மெயிலையும் கூட தவறுதலாக நீங்கள் அழித்து விட வாய்ப்புண்டு.

எமக்கு முன்பின் அறியாத ஒரு நபர் எமது கம்பியூட்டரை தனது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வருவதோடு எமது கணினியிலிருந்தே, ஸ்பாம் அஞ்சல்களை வேறு நபர்களுக்கு அனுப்பிவிடுவார்கள். இதனால் யாரோ ஒருவர் செய்யும் தவறுக்கு நாமே பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

***ஏன் ஸ்பாம் அஞ்சல்கள் அனுப்புகிறார்கள்?***

ஸ்பாம் ஒரு வகை விளம்பர உத்தி எனக் கூடக் கூறலாம். மிகக் மிகக் குறைந்த செலவில் ஆயிரக்கணக்கான மெயில்களை ஒரே தடவையில் அனுப்பி விடுகிறார்கள் ஸபாமர்கள். இவர்கள் அனுப்பும் மெயில்கள் கிடைக்கப் பெறும் பத்தாயிரம் பேரில் ஒரே ஒருவர் மட்டும் ஒரு பொருளை இவர்களிடமிருந்து

கொள்வனவு செய்து விட்டால் அல்லது சேவையைப் பெற்று விட்டால் போதும். அதன் மூலம் அந்த ஸ்பாமர் ,இலாபமடைந்து விடுகிறார்.

**ஸ்பாம் அஞ்சலைத் தவிர்ப்பது எப்படி?**

1. ஸ்பாம் எதிர்ப்பு அல்லது ஸ்பாம் வடிகட்டும் **(Spam Filter)** மென்பொருளை நிறுவிக் கொள்ளுங்கள். இதன் மூலம் ஸ்பாம் அஞ்சல்களை ஓரளவுக்குக் குறைத்து விடலாம். அத்துடன் ஸ்பாம் பில்டரில் எவை எவை ஸ்பாம் என நாமே முன் கூட்டியே காட்டி விட்டால் மீண்டும் மீண்டும் அதே ஸ்பாம் வருவதைத் தடுக்கலாம்.

2. உங்களுக்கு வரும் ,மெயில் அனுப்பியவர் யார் எனத் தெரியாத பட்சத்தில் அதனை அழித்து விடுங்கள். சில வேளை அந்த ஸ்பாம் மெயிலுடன் வைரசும் சேர்ந்திருக்கக் கூடும். அதனைத் திறந்து பார்க்க உங்கள் கணினி வைரஸ் தாக்கத்திற்குள்ளாகலாம்.

3. ஸ்பாம் அஞ்சலுக்கு ஒரு போதும் பதில் அளிக்கவோ அல்லது அதனோடு வரும் லிங்கில் க்ளிக் செய்யவோ வேண்டாம். அவ்வாறு பதிலளிப்பது சரியான ஒரு முகவரிக்கே நாம் மெயில் அனுப்பியுள்ளோம் என்பதை ஸ்பாமருக்கு உணர்த்தி விடும்.

4. ஸ்பாம் அஞ்சலில் வரும் விளம்பரங்களைப் பார்த்து பொருட்களையோ சேவையையோ பெற்று விடாதீர்கள். இது மேலும் மேலும் ஸ்பாம் அஞ்சலைப் பெற வழி வகுப்பதோடு மாத்திரமின்றி உமது ஈ-மெயில் முகவரி ஏனைய ஸ்பாமர்களின் கையிலும் சேர வாய்ப்புள்ளது.

5. சில இணைய தளங்களில் படிவங்களை நிரப்பும்போது “மேலதிக விவரங்களைப் பெற” ஒரு **check box** ஐ தெரிவு செய்யவோ அல்லது நீக்கவோ வேண்டியிருக்கும். அதனைத் தெரிவு செய்யாமல் தவிர்ப்பது நல்லது.

6. இமெயில் அனுப்பும் புரோக்ராம்களில் **(Mail Client)** உங்களது மெயிலைத் திறந்து பார்க்காமலேயே அதன் உள்ளடக்கத்தைக் காட்டும் **(Preview)** வசதியுள்ளது. இவ்வாறு **preview** ல் பார்க்கும் போதே ஸ்பாமர்கள் தாங்கள் அனுப்பிய ஸ்பாம் உரியவரைச் சென்றடைந்து விட்டதை உறுதி செய்து கொள்வார்கள். அவ்வாறு **Preview** ல் காட்ட வைக்காமல் அதன் தலைப்பை மட்டுமே பார்த்து நம்பகமான மெயிலை மட்டும் திறவுங்கள்.

7. ஒரே மெயிலைப் பல பேருக்கு அனுப்பும் போது **Bcc (Blind Carbon Copy)** எனும் , இடத்தில் முகவரிகளை டைப் செய்யுங்கள். இந்த **Bcc** பகுதியில் டைப் செய்யும் மெயில் முகவரிகள் நீங்கள் யார் யாருக்கு இந்த இமெயில் அனுப்பியுள்ளீர்கள் என்பதை மறைத்து விடும். மாறாக To பகுதியில் டைப் செய்தால் நீங்கள் டைப் செய்யும் முகவரிகள் அனைத்தும் ஸ்பாமர்களை அடையும்.


8. உங்கள் மின்னஞ்சல் முகவரிகளை நம்பிக்கையானவர்களிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ளுங்கள்.

9. இணைய தளங்கள் மற்றும் நியூஸ் க்ரூப் போன்றவற்றைப் பார்வையிடும் போதும் இணைய அரட்டையில் ஈடுபடும் போதும் இமெயில் முகவரிகளை வழங்க நேரிடும் போது மின்னஞ்சல் முகவரிகளில் பயன்படுத்தப்படும் “ **@** “ எனும் குறியீட்டுக்குப் பதிலாக **AT** என டைப் செய்யுங்கள். இந்த “ **@** “ குறியீட்டைக் கொண்டே ஸ்பாமர்கள் பயன்படுத்தும் ப்ரோக்ரம்கள் இது ஒரு மின்னஞ்சல் முகவரியென கண்டறிந்து கொள்ளும்.

10. எப்போதும் ஒரே இமெயில் முகவரியை மட்டும் பயன் படுத்தாமல் ஒன்றுக்கு மேற்பட்ட முகவரிகளை பயன்படுத்துங்கள். உதாரணமாக அலுவலக தேவைக்கென ஒரு இமெயில் முகவரி, தனிப்பட்ட தேவைக் கென ஒன்று மற்றும்,இணைய தளங்களில் வரும் படிவங்களை நிரப்பும் தேவைக்கென வேறொன்றும் என வெவ்வேறாக வைத்துக் கொள்ளுங்கள் . ஸ்பாமர்களிடமிருந்து ஓரளவுக்குத் தப்பிக் கொள்ளலாம்

# உள்ளங்கையில் கீபோர்டு:

# கொம்பியூட்டர் யுகத்தின் அடுத்த புரட்சி



உள்ளங்கையில் வைத்து பட்டனை செல்லமாக தட்டினால், கொம்பியூட்டர் இயங்கத்துவங்கும் நீங்களும் அதை இயக்கலாம் இன்டர்நெட் பார்க்கலாம் இ-மெயிலும் தரலாம்.என்னது இப்படி ஒரு அதிசயமா என்று வியக்கிறீர்களா? ஆம்,கையடக்க... இல்லையில்லை உள்ளங்கை அடக்க, மிகவும் சிறிய அளவில், "ஸ்டிக்கர்' வடிவ கீ போர்டு வந்து விட்டது. இந்தப் புதிய கருவிக்கு, "ஸ்கின்புட்' என்று பெயர். நம் காதால் கேட்க முடியாத மிகக் குறைந்த சத்தங்களைக் கண்டறியும் அடிப்படையில் இக்கருவி இயங்கும். நம் உள்ளங்கையில் இதை வைத்துக் கொண்டு, லப்டொப், கொம்பியூட்டர், மொபைல், ஐபொட் ஆகியவற்றை இயக்க முடியும்.

மைக்ரோசிப் வடிவிலான புரஜக்டர்கள் தான் கீபோர்டு வடிவில் இருக்கும். அதில் உள்ள பட்டன் களை நீங்கள் தட்டினால் அதிலிருந்து எழும் சத்தத்தை வைத்து அதற்கான விளைவுகள் திரையில் உருவாகும்.முன்னங்கைகளில் எந்த இடத்தில் எந்த சிப் இருக்கிறதோ அந்த, "சிப்'பில் உள்ள பட்டனை மிகவும் செல்லமாக நீங்கள் தட்டினால் போதும் என்ன எழுத்து வரவேண்டுமோ அதுவரும் வகையில், கைகளில் பல்வேறு கோணங்களில் பொருத்தப் பட்டுள்ள சென் சார்களிலிருந்து செய்தி கடத்தப்படும் வகையில் இந்தப் புதிய கருவி வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருவி, 20 வாடிக்கையாளர்களைக் கொண்டு சோதனை செய்யப்பட்டுள்ளது. விரைவில் இது சந்தைக்கு வரக்கூடும்.

*Elate Computer Systems*

# பென்டிரைவில் உள்ள சிக்கல்களை சரிசெய்வதற்கு




நாம் அன்றாடம் பல கணணிகளில் பலதரப்பட்ட காரணங்களுக்காக பென்டிரைவ்களை பயன்படுத்துகின்றோம்.

இதனால் வைரஸ், மல்வேயார்கள் உங்களது பென்டிரைவில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். உங்களது முக்கியமான கோப்புக்களை அழித்து விடுவதுடன், கோப்புறை குறுக்குவழிகளை(**folder shortcuts**) உருவாக்கிவிடும்.

சில சமயங்களில் எப்படி உங்களது கோப்புக்களை மீள பெறுவது என தெரியாமல் இருக்கும். பின்வரும் வழிமுறையை பின்பற்றி இந்த பிரச்சனையை சரிசெய்து கொள்ளுங்கள்.

முதலில் **Command Prompt** யை திறப்பதற்கு **F Run–**, சென்று அங்கே **"cmd"** என டைப் செய்யுங்கள்.

பின்னர் திறக்கும் திரையில் **attrib -h -r -s /s /d h:*.*** என டைப் செய்யுங்கள்.

மேலே காணப்படும் **h** என்பதற்கு பதிலாக உங்களது சரியான பென்டிரைவின் **Drive Letter-I** கொடுங்கள் (இதை உங்களது **My Computer** யில் கிளிக் செய்து பார்க்கலாம்).

இனி உங்களது பென்டிரைவில் சென்று அங்கு உள்ள தேவையற்ற **shortcuts**களை அழித்து விடுங்கள். இவ்வாறு செய்தால் உங்களது பென்டிரைவின் கோப்புறை குறுக்குவழி(**Folder Shortcut**) சிக்கலை சரிசெய்து விடலாம்.

*Elate Computer Systems*


# மல்வேயார்களுடன் (Malware) ஒரு யுத்தம்!

இன்றைய தகவல் தொழில் நுட்பம் பல்வேறு பிரிவுகளில் வளர்ந்து நம் அன்றாட வாழ்க்கைக்கு உதவி செய்து வருகிறது. இதன் வளர்ச்சியின் பரிமாணங்கள் ஒன்றுக் கொன்று தொடர்புடையதாய் பின்னப்பட்டு இருப்பதால் இந்த நெட்வோர்க்கிற்குள் மல்வேயார் புரோகிராம் எனப்படும் நமக்குக் கெடுதல் விளைவிக்கும் புரோகிராம்கள் மிக எளிதாக வழி கண்டு நம் பயன்பாட்டினை முடக்குகின்றன.



அமெரிக்காவில் 50 சென்ட் வாங்கிக் கொண்டு அடுத்தவரின் கிரெடிட் கார்ட் தகவல்களைத் தர ஒரு கூட்டம் தலைமறைவாக இயங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மற்றவர்களின் சொந்த தகவல்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்துவது மல்வேயார் எனப்படும் புரோகிராம்களே. இவற்றைக் கண்டறிந்து அது நம் கொம்ப்யூட்டரை அடைவதைத் தடுப்பதையும் அதன் செயல்பாட்டினை முடக்குவதையும் பல நிறுவனங்கள் தங்கள் நோக்கமாகக் கொண்டு வர்த்தக ரீதியாகவும் செயல்பட்டு வருகின்றன.

இத்தகைய மோசமான மலிசியஸ் புரோகிராம்களின் தன்மையை இங்கு காணலாம். முதலில் இந்த வகை சொப்ட்வேயார் பற்றிக் குறிப்பிடுகையில் பயன்படுத்தப்படும் சொற்கள் குறித்துக் காணலாம். மல்வேயார் என்பது **Malicious Software** என்ற சொற்களின் சுருக்கம் ஆகும். கெடுதல் மற்றும் தீங்கு விளைவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ள சொப்ட்வேயார் என்று பொருள்படும். இதனை உருவாக்குபவர்களின் நோக்கம் அடுத்தவரின் கொம்பியூட்டருக்குள் சென்று அவர்களின் பேர்சனல் தகவல்களை (வங்கி எண், கிரெடிட் கார்ட் எண், பாஸ்வேர்ட் போன்றவை) கண்டறிவதற்காக உருவாக்கப்படுபவை. **Malcode** என்பது **Malicious Programming Code** என்பதன் சுருக்கமாகும். இதனை **Malware's payload** என்று குறிப்பிடுவார்கள்



## Antimalware

மல்வேயார் தொகுப்புகளுடன் சண்டையிட்டு அவற்றை அழிக்கும் அல்லது செயல்பாட்டினை முடக்கும் அனைத்து புரோகிராம்களும் அண்ட்டி மல்வேயார் என அழைக்கப்படுகின்றன. அண்ட்டி வைரஸ் மற்றும் அண்ட்டி ஸ்பைவேயார் அப்ளிகேஷன்கள் அனைத்தும் இந்த வகையைச் சேர்ந்தவை. மல்வேயார் ஒன்றின் முதல் நோக்கம் மீண்டும் மீண்டும் உருவாக்குவதே. கொம்பியூட்டர் சிஸ்டத்திற்குக் கெடுதல் விளைவிப்பது, டேட்டாவினை அழிப்பது, பெர்சனல் மற்றும் இரகசியத் தகவல்களைத் திருடுவது என்பனவெல்லாம் இரண்டாம் பட்ச நோக்கங்களே. மேற்குறித்த விளக்கங்களை மனதில் கொண்டு மல்வேயார் ஒன்றின் பரிமாணங்களைப் பார்க்கலாம்

## 1.கொம்பியூட்டர் வைரஸ்

மல்வேயார்களில் இது முதல் வகை. இது கொம்பியூட்டரைப் பாதித்து என்ன நோக்கத்திற்காக எழுதப்பட்டுள்ளதோ அந்த வேலையச் செய்திடும். ஆனால் இது பரவுவதற்கு இன்னொரு புரோகிராம் அல்லது பைலின் துணை வேண்டும். பாதிப்பை ஏற்படுத்திய கொம்ப்யூட்டரிலிருந்து இன்னொரு பாதிப்படையாத கொம்ப்யூட்டருக்குச் செல்ல வேண்டும் என்றால் இயக்கக் கூடிய எக்ஸிகியூட்டபிள் பைல் ஒன்றின் பகுதியாகச் செல்ல வேண்டும். வைரஸ் புரோகிராம் ஒன்றில் பொதுவாக மூன்று பகுதிகள் இருக்கும்.

## Replicator

வைரஸ் பயணம் செய்திடும் புரோகிராம் இயக்கப்படுகையில் வைரஸ் புரோகிராமும் இயங்கி பரவுகிறது.

## Concealer

வைரஸ் எதிர்ப்பு புரோகிராம்களின் கண்களில் சிக்காத வகையில் பல வகையான மறைப்புகளை வைரஸ் கொண்டிருக்கும்.

## ˚ayload

வைரஸின் நோக்கம். இது எது வேண்டுமானாலும் இருக்கலாம். கொம்ப்யூட்டரின் செயல்பாட்டை முடக்குவது, டேட்டாவைத் திருடுவது, அழிப்பது என எதாக வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த வைரஸ் பைல்களின் சிக்னேச்சர் பைல் கோடினைக் கண்டறிந்துவிட்டால் அவற்றை அழிப்பதற்கான ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்கள் உருவாக்குவது மிக எளிது. முன்னணியில் இயங்கும் ஆண்ட்டி வைரஸ் புரோகிராம் தயாரிப்பு நிறுவனங்கள் இதைத்தான் செய்கின்றன.

## 2. கொம்பியூட்டர் வோர்ம் (Computer Worm)

இவை வைரஸ்களைக் காட்டிலும் அதன் கட்டமைப்பில் சற்று நகாசு வேலைகள் கொண்டவை. பயன்படுத்துபவர் இயக்காமலேயே தாங்களாகவே இயங்கி செயல்படக் கூடியவை. இந்த மல்வேயார்கள் இணையம் வழியாக எளிதாகப் பரவுகின்றன. வோர்ம் மல்வேயார் நான்கு பிரிவுகள் இருக்கும். **Penertration Tool** என்னும் பிரிவு ஒரு கொம்பியூட்டரில் பயன்படுத்தும் புரோகிராம்களில் மிகவும் பலமற்ற இடத்தைப் பார்த்து அதன் வழியாக நுழைந்துவிடும் செயலை மேற்கொள்ளும். **Installer** என்னும் அடுத்த பிரிவு கொம்ப்யூட்டரில் வோர்ம் நுழைந்தவுடன் கெடுதல் விளைவிக்கும் மல்வேயாரின் பிரிவினை வேகமாக நுழைந்த கொம்ப்யூட்டரில் பதிக்கிறது.

தொடரும்...............

# டிவி க்களில் ஸ்கைப்



வோய்ஸ் ஓவர் புரோட்டோகால் தொழில் நுட்பத்தின் உதவியுடன் இன்டர்நெட் இணைப்பில் உள்ள இருவர், தங்களின் பெர்சனல் கொம்பியூட்டர், மொபைல் போன், கார்ட்லெஸ் போன், வீடியோ போன் ஆகியவற்றின் மூலம் திரையில் ஒருவரை ஒருவர் பார்த்து உரையாடிக் கொள்ளலாம். இதனால் ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருப்பவர்கள் கூட ஒரே அறையில் அமர்ந்து பேசுவது போன்ற நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த வகையில் இலவச அப்ளிகேஷன் புரோகிராம்களைப் பல நிறுவனங்கள் அளித்து வந்தாலும், ஸ்கைப் இதில் முன்னணி இடம் பிடித்துள்ளது.

இனி இந்த வகைத் தொடர்பினை, "டிவி'க்கள் வழியாகவும் தருவதற்கு ஸ்கைப் முன்வந்துள்ளது. முதன் முதலாக "டிவி'க்களில் இந்த தொழில் நுட்பத்தினை ஸ்கைப் கொண்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தத்தினை எல்.ஜி. மற்றும் பானாசோனிக் நிறுவனங்களுடன் மேற் கொண்டுள்ளது. இந்த இரு நிறுவனங்களும் இன்டர்நெட் வசதி இணைந்த "டி.வி'க்களைத் தயாரித்து வழங்கி வருகின்றன.

இணையத் தொடர்பினை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படும் தொலைக் காட்சிப் பெட்டிகள் மூலம் வீடியோ அழைப்புகளை மேற்கொள்ளலாம். இதற்கான புரோகிராமினை ஸ்கைப் வழங்குகிறது. பனசொனிக் நிறுவனம் இது பற்றிக் கூறுகையில் தங்களின் 2010 **Viera Castenabled HDTV** செட்களை வைத்திருப் பவர்கள் இந்த தொழில் நுட்பத்தை எளிதில் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளது. வர்த்தக ரீதியாகப்

பொது மக்களுக்கு இந்த வகை “டிவி’க்கள் வரும் மாதங்களில் கிடைக்கும். எல்.ஜி. நிறுவனம் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் **Netcast Entertainment Access** தொழில் நுட்பம் உள்ள தங்கள் நிறுவனத்தின் 26 மாடல் எல்.இ.டி., எல்.சி.டி. மற்றும் பிளாஸ்மா டிவிக்களில் ஸ்கைப் புரோகிராமினைப் பயன்படுத்தி வீடியோ கால்களை மேற்கொள்ளலாம் என்று கூறியுள்ளது.

வீடியோ அழைப்புகளை இந்த “டிவி’க்கள் மூலம் மேற்கொள்ள, இந்த இரு நிறுவனங்களும், மைக்ரோபோன் இணைந்த வீடியோ கேமராக்களை “டிவி’க்களில் இணைக்கும் வகையில் வடிவமைத்துத் தர இருக்கின்றன. இன்டர்நெட் இணைப்பு குறித்துக் கூறுகையில் குறைந்தது விநாடிக்கு 1 மெகா பிட் வேகம் உள்ள இணைப்பு வேண்டும் என ஸ்கைப் அறிவித்துள்ளது. ஸ்கைப் இணைக்கும் வகையில் உள்ள டிவிக்களை எல்.ஜி. வரும் ஏப்ரல் மாதத்திற்குள்ளும், ஸ்கைப் இணைந்த எச்.டி.டி.விக்களை வரும் மார்ச் மாதத்திற்குள் பனசோனிக்கும் தருவதாக உறுதி அளித்துள்ளன.

இதுவரை உயர் தொழில்நுட்ப ஆய்வு மையங்கள், சில சிறப்பு கருத்தரங்க அமைப்புகளில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த இந்த தொழில் நுட்பம் மக்களுக்காக வர்த்தக ரீதியில் கிடைக்கப் போகிறது என்பது, தொலை உணர்வு வசதியை மக்களுக்கு அளிப்பதில் நாம் இன்னும் ஒரு படி உயர்கிறோம் என்பதைக் காட்டுகிறது. இனி பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில் வசிக்கும் தங்கள் பிள்ளைகளை, பெற்றோர்கள் தங்கள் டிவி திரைகள் மூலம் தங்களின் வீடுகளுக்கே கொண்டு வந்து பார்த்துப் பேசி மகிழலாம்.

# ஒன்லைனில் இலவசமாக பக்ஸ் (Fax) அனுப்ப சிறந்த 10 தளங்கள்



சில முக்கிய நகல்களை நாம் அவசரமாக அனுப்ப பக்ஸ் மூலம் அனுப்புவோம். இதற்கு பணம் கொடுத்து தான் அனுப்ப வேண்டும். இலவசமாக அனுப்ப வேண்டுமென்றால் அந்த இயந்திரத்தை விலை கொடுத்து வாங்க வேண்டும். ஆனால் இந்த குறைகளை தவிர்க்க ஒன்லைனில் இலவசமாக அனுப்பலாம். இதற்க்கு பத்து சிறந்த தளங்களை கீழே வரிசை படுத்தி உள்ளேன்.

## EeFax

இந்த தளத்தில் 30 நாட்களுக்கு சுமார் 180 பக்கங்களை இலவசமாக பக்ஸ் அனுப்பி கொள்ளலாம். இந்த தளம் சுமார் 15 வருடங்களாக இந்த சேவையை வழங்கி வருகிறது. உலகளவில் 49 நாடுகளில் இந்த சேவை உள்ளது. 30 நாட்களுக்கு பிறகு மாத கட்டணத்தை வசூலிப்பார்கள்.

## 2. Super Fax

இந்த தளம் உலக அளவில் மிக பிரபலமான தளம். உங்கள் ஈமெயிலை இதன் மூலம் பக்ஸ் அனுப்பலாம். இந்த தளத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுமே இலவசமாக பக்ஸ் அனுப்ப முடியும். சுமார் 10 முறை பக்ஸ் அனுப்பலாம்.

## 3. Faxmyway

இந்த தளத்தில் 5 நாட்களுக்கு இலவசமாக பக்ஸ் அனுப்பி கொள்ளலாம். இது ஒரு இந்திய நிறுவனமாகும். ஒரே நேரத்தில் பல பேருக்கு பக்ஸ் அனுப்பும் வசதி இந்த தளத்தில் உள்ளது.

## 4. Free Fax

இது முழுக்க முழுக்க இலவச சேவையாகும். இதில் பக்ஸ் அனுப்ப மட்டுமே முடியும், பெற முடியாது. உலகளவில் இலவசமாக இந்த தளம் மூலம் இலவசமாக பக்ஸ் அனுப்ப இயலும்.

## 5. Speed Fax

இதில் இலவசமாக மூன்று நாட்களுக்கு பக்ஸ் அனுப்பியும் பெற்றும் கொள்ளலாம். இது ஒரு இந்திய நிறுவனமாகும். மூன்று நாட்களுக்கு பிறகு ஆறு மாதம் அல்லது ஒரு வருடத்திற்கான தொகையை கட்டினால் இந்த வசதியை தொடர்ந்து பெறலாம்.

## 6. Sendfreefax

இந்தியர்களுக்கென்று பிரத்யோகமாக உருவாக்கப்பட்ட தளமாகும். இதில் இந்திய அளவில் இலவசமாக கணக்கில்லாமல் முழுக்க முழுக்க இலவசமாக பக்ஸ் அனுப்பி கொள்ளலாம். இதில் பக்ஸ் அனுப்புவது மிகவும் சுலபமாக இருக்கும்.

## 7. Pop fax

20 நாடுகளில் 500 நகரங்களில் இந்த வசதி செயல்படுகிறது. இதில் உள்ள சிறப்பு என்னவென்றால் உங்கள் மொபைலில் இருந்து கூட பக்ஸ் அனுப்பி கொள்ளலாம். இதுவும் உலகளவில் மிக பிரபலமான தளமாகும்.

## 8. faxzero

இதுவும் ஒரு இலவச சேவையாகும். இதில் கட்டண வசதியும் உள்ளது. இலவச சேவையில் தினமும் 2 பக்ஸ் தான் அனுப்ப முடியும். மற்றும் இலவச சேவையில் நீங்கள் பக்ஸ் அனுப்பினால் இந்த தளத்தின் லோகோ வாட்டர் மார்க்காக தெரியும். கட்டண வசதியில் இந்த பிரச்சினைகள் இல்லை.


## 9. Hello Fax

இந்த தளத்தில் பக்ஸ் அனுப்பும் டொக்கிமெண்ட்டை எடிட் செய்து கொள்ளும் வசதி உள்ளது. இந்த சேவை 30 நாட்கள் வரை செய்து கொள்ளலாம்.

## 10. Ring Central

இது உலகளவில் மிக பிரபலமான தளமாகும். இந்த தளத்தில் உங்கள் மொபைலில் இருந்து பக்ஸ் அனுப்பலாம் உங்களுக்கு வரும் பேக்சை மொபைல் மூலம் பெறலாம். பிளாக்பெரி,ஐபோன் போன்றவைகளுக்கு மென்பொருள் இந்த தளத்தில் இருந்து தரவிறக்கி டவுன்லோட் செய்து கொண்டு இந்த வசதியை பயன்படுத்தலாம்.

# உங்கள் கையெழுத்தை Font ஆக மாற்றுங்கள்!




அழகான, தெளிவான கையெழுத்தைக் கொண்டவரா நீங்கள்? அப்படியானால் இந்த தகவல் உங்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் தரும் என்பது நிச்சயம். உங்கள் கையெழுத்தையும் ஒரு **Font** ஆக (கணினி எழுத்துரு) மாற்றிக் கொள்ளலாம். கையெழுத்தை பொண்டாக மாற்றித் தருகிறது **Fontcapture.com** எனும் இணைய தளம். இது ஒரு ஓன்லைன் சேவையாகும்.

கையெழுத்தைத் திருத்தமாக எழுது! அழகாக எழுது! என்று சின்ன வயதில் ஆசிரியர் எத்தனையோ தடவை அறிவுரை சொன்னார்தான். நான்தான் கேட்கவில்லையே! எனக்குத்தான் கையெழுத்து ஒழுங்காக வராதே என்ற கவலையும் வேண்டாம். அதற்கு நீங்கள் அழகான கையெழுத்தைக் கொண்ட ஒருவரின் உதவியை நாடலாம்.

சரி, இதற்கு எந்த மென்பொருளை நிறுவிக் கொள்வது? எந்த மென்பொருளும் நிறுவ வேண்டாம். உங்களிடம் ஒரு ப்ரிண்டர், ஸ்கானர் மற்றும் இணைய இணைப்பு இருந்தால் மட்டும் போதும்.

கையெழுத்தை பொண்ட் பைலாக மாற்ற முதலில் **www.fontcapture.com** எனும் இணைய தளத்திற்குப் பிரவேசியுங்கள். அவர்கள் வழங்கும் பொண்ட் டெம்ப்லேட் (**template**) பைலை டவுன் லோட் செய்து கொள்ளுங்கள். இது **PDF** பைலாகக் கிடைக்கும். அதனை ப்ரிண்ட் செய்து கொள்ளுங்கள்.

அடுத்து அந்த டெம்ப்லேட்டை இணைய தளத்தில் அறிவுறுத்தியிருப்பதன் பிரகாரம் உங்கள் கையெழுத்தால் நிரப்பிக் கொள்ளுங்கள். பின்னர் அந்த டெம்ப்லேட்டை ஒரு இமேஜ் பைலாக ஸ்கேன் செய்து மறுபடி அதே இணைய தளத்திற்குச் சென்று (**upload**) அப்லோட் செய்து விடுங்கள். ஒரு சில நிமிடங்களில் உங்கள் கையெழுத்தைக் கொண்ட ஒரு பொண்ட் பைலாக அதனை நீங்கள் டவுன்லோட் செய்து கொள்ளலாம்.

ஆக்கம் P.JOHNSON **(Elate computer Systems)**

# VB அறிமுகம்

நாம் கணனியை பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்ய பயன்படுத்துகின்றோம். இந்த வேலைகள் எல்லாம் **Software** கள் மூலம் செயற்படுத்தப்படுகின்றன. நாம் கணனியில் **Type** பண்ணி **Print** எடுக்கின்றோம், படங்களை **Scan** பண்ணுகின்றோம், திரைப் படங்கள் பார்க்கின்றோம், **CD** ஐ பிரதி பண்ணுகின்றோம், அலுவலக வியாபார தேவைகளை நிறைவேற்றவும் மென்பொருள் வாங்கி பயன்படுத்ததுகின்றோம். ஆனால் இவை எல்லாம் எவ்வாறு செயற்படுகிறது என யோசித்திருக்கிறோமா?

கணனிக்கு உண்மையில் அடிப்படையாக புரிந்து கொள்ளக்கூடிய மொழி 0, 1 அதாவது குறைந்த மின்னழுத்தம், கூடிய மின்னழுத்தம். எல்லா மென்பொருட்களும் புரோகிராமிங் மொழிகள் மூலம் உருவாக்கப்பட்டு கணனிக்கு விளங்கக்கூடிய மொழியாக மாற்றப்பட்டு இயங்குகின்றன. கணனி மொழிகளை நாம் கற்பதன் மூலம் எமக்குத்தேவையான மென்பொருட்களை நாமே உருவாக்குவதுடன் புதிய புதிய மென்பொருட்களையும் கண்டுபிடிக்கலாம். **Visual Basic, C++, VB.Net, C#, Java** உட்பட பல கணினிமொழிகள் மென்பொருள் உருவாக்குவதற்கு பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

இவற்றில் விசுவல் பேசிக் மொழி கற்றுக்கொள்வதற்கு மிக இலகுவானதுடன் விரைவாகவும் பயன்படுத்தக்கூடிய ஒரு கணனி மொழியாகும். விசுவல் பேசிக் மூலம் உருவாக்கிய சிறிய மென்பொருட்களை பயன்படுத்தும்போது **Support** ஆக வேறு மென்பொருட்கள் **(.net Frame Work,...) Install** பண்ணத்தேவையில்லை. ஏனைய மொழிகளில் தவறு இருக்கிறதா எனப்பார்க்க **compile** பண்ணி பின் அவற்றைத் திருத்தி மிண்டும் **compile** பண்ணி தவறு இல்லாத நிலையில் தான் உருவாக்கிய மென்பொருளை இயக்கலாம். ஆனால் விசுவல் பேசிக் ல் தவறு வரும்போதே சுட்டிக்காட்டி உடனடியாக மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கின்றது.

பலர் விசுவல் பேசிக் மூலம் பெரிய மென்பொருட்களை உருவாக்க முடியாதெனவும், தற்போதய தேவைகளை நிறைவேற்றுவதற்கு வசதி குறைந்த மொழி என நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இதன் மூலம் நிறுவனத்தில் இடம்பெறும் வியாபார பதிவு நிலைமைகளை வீட்டில் இருந்து பார்க்கக்கூடியதாகவும், **Mobile Phone** மூலம் கணனியை கட்டுப்படுத்தக்கூடிய மென்பொருட்கள் உட்பட பல பெரிய மென்பொருட்களை உருவாக்கலாம். இதன்மூலம் **windows** 7 போல் உள்ளே இருப்பவை தெரியக்கூடிய கண்ணாடி போன்ற Form களையும் உருவாக்கலாம். ஆனால் **VB.Net, C#** ல் பயன்படுத்தும் நிறங்கள் சற்று கூடிய கவர்ச்சியாக இருக்கும்.

# Visual Basic ன் வரலாறு

1960 களில் **Kemeny, Kurtz** என்ற இரண்டு கணித விரிவுரையாளர்களால் **Dartmouth College** என்ற இடத்தில் **Basic** எனும் மொழி கற்பித்தல் சாதனமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது கிட்டத்தட்ட ஆங்கிலம் போல இருந்தது. இதன் விரிவாக்கம் **Basic :- Beginner's All-Purpose Symbolic Instruction Code** ஆகும். பின்னர் 1981ற்குப் பின் **Microsoft** நிறுவனம் **QuickBasic, QBasic** ஆகிய என்ற பெயர்களிலும் **IBM** நிறுவனம் **IBM BASICA** என்ற பெயரிலும் வேறொரு நிறுவனம் **GWBASIC** என்ற பெயரிலும் இதை மாற்றியமைத்து வெளியிட்டன. இவை அப்போது பாவனையிலிருந்த **MS DOS Operating System** இலேயே இயங்கின. இவை எழுத்துக்களை மட்டும் கொண்டிருந்தன.

பின் **MS Windows 1.0** ல் இயங்கங்கூடியதாக **Visual Basic 1.0 May** 1991 ல் **Windows World Conference** அறிமுகப்படுத்தப்பட்டது. பொதுவாக நமது கண்ணுக்கு தெரிபவற்றை விசுவல் என அழைப்போம். நாம் உருவாக்கும் மென்பொருட்களை முன்கூட்டியே உனரும்வகையில் அல்லது முன்னரே அறிந்துகொள்ளும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளதால் இதனை விசுவல் பேசிக் என அழைககப்பட்டது. பின் **Windows** 3.1இ **Windows for Workgroups, Windows NT, or Windows** 95 ஆகியவற்றில் இயங்கங்கூடியதாக **Visual Basic 3.0** வும் **Visual Basic 4.0 (16 bit**) வும் வெளிவந்தன. இவை **Database** உடன் இணைக்கக்கூடியதாக இருந்ததுடன் பிரபலயமடையவும் தொடங்கியது. பின்னர் **Windows 95, Windows NT (Version 3.5.1)** ஆகியவற்றில் இயங்கங்கூடியதாக **Visual Basic 4.0 (32 bit), Visual Basic 5.0, Visual Basic** 6.0 ஆகியன வெளிவந்தன**. Visual Basic** 6.0 1998 இலும் **VB.Net 2002** இலும் வெளிவந்தன

தொடரும்……

ஆக்கம் வி.ஐங்கரன்
(software developer)
**Elate Computer Systems**

# "WiFi" என்றால் என்ன?

**"WiFi"** என்பது கேபிள்கள்,கம்பிகள் போன்றவற்றை பயன்படுத்தாமல் உபயோகப்படுத்தக்கூடிய அதிவேக இண்டர்நெட் மற்றும் நெட்வொர்க் இணைப்பு (**wireless** நெட்வொர்க்). இந்த இணைப்பு **wired** நெட்வொர்க் காட்டிலும் எளிதாக மற்றும் மலிவானதாக உள்ளது**.** **phone socket** தேவைப்படாத காரணத்தினால் கொம்பியூட்டர் ஐ எங்கு வேண்டுமென்றாலும் நகர்த்திக் கொள்ளலாம். அதுமட்டும் இல்லாமல் விரைவாகவும் எளிதாகவும், ஒரு இணைய இணைப்பைக் கொண்டு பல கணனிகளை இணைக்க அனுமதிக்கிறது.

# WiFi Hotspots என்றால் என்ன?

**WiFi** ஹாட்ஸ்பாட் என்பது **WiFi** ரேடியோ சிக்னல்கள் கிடைக்கக்கூடிய குறிபிட்ட பகுதி.ஒரு வயர்லெஸ் ரவுட்டர் கொண்டு **WiFi** இனைப்பை உங்கள் கணனியில் செயல்படுத்திவிட்டால், சுமார் 20 மீட்டர் (65 அடி) (உள்புறம் மற்றும் அதிக அளவு வெளிப்புறங்களில்) **WiFi** கொட்ஸ்பாட்டாக (**access point**) இருக்கும்.


**வயர்லெஸ் நெட்வொர்க் அமைக்க என்ன தேவை?**

1. வயர்லெஸ் நெட்வொர்க்கிங் ஆதரிக்கும் ஒரு இயக்க அமைப்பு (**Operating system)**
2. **Broad band (DSL** அல்லது கேபிள்) இணைய இணைப்பு.
3. ஒரு கம்பியில்லா திசைவி(**wireless router**), ஒரு டிஎஸ்எல் மோடம், அல்லது உள்ளமைக்கப்பட்ட(**inbuilt)** வயர்லெஸ் நெட்வொர்க்கிங் **support** கேபிள் மோடம்.
4. வயர்லெஸ் நெட்வொர்க்கிங் ஆதரவு அல்லது ஒரு வயர்லெஸ் நெட்வொர்க் **adapter** உள்ளமைக்கப்பட்ட கணினி.
5. உங்கள் திசைவி அமைப்பு அறிவுறுத்தல்கள்(**router setup instructions**) ஒரு நகல்.

வயர்லெஸ் நெட்வொர்க் அமைப்பது எப்படி?

1. இணையத்துடன் இணைக்கவும்
2. கம்பியில்லா திசைவி (**wireless router**)இணைக்கவும்.
3. கம்பியில்லா திசைவி (**wireless router**) யை **configure** செய்யவும்.
4. வயர்லெஸ் நெட்வொர்க்கில் கொம்பியூட்டர்கள், பிரிண்டர்கள், மற்றும் பிற சாதனங்களை இணைக்கவும்.
5. இறுதியாக கோப்புகள், அச்சுப்பொறிகள், போன்றவற்றை பகிர்ந்து கொள்ளலாம்.

# கொம்பியூட்டரில் 'செக்' போடுங்க கணக்கில் பணத்தை சேருங்க வந்திருச்சி லேட்டஸ்ட்





"செக்' கையெழுத்து போட்டு, அதை வங்கிக்குச் சென்று நேரில் கொடுத்து பணம் எடுக்கும் வழக்கம் காணாமல் போய்விடும். ஆம். வீட்டிலிருந்தபடியே உங்கள் "செக்'கை கொம்பியூட்டரில் அனுப்பினால், பணம் உங்கள் வங்கிக் கணக்கில் வந்துவிடும். நவீன தொழில்நுட்பம், காலத்தையும் இடத்தையும் சுருக்கும் புதிய ஆயுதமாக வடிவெடுத்துள்ளது. ஏற்கனவே கொம்பியூட்டர் மற்றும் மொபைல் போன் மூலம் இருந்த இடத்தில் இருந்தபடியே வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வசதி வந்துள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவில், அமெரிக்க சேஸ் வங்கி மற்றும் சிட்டி வங்கி இரண்டும் புதுமையான ஒரு நடவடிக்கையை விரைவில் தொடங்க இருக்கின்றன. இதன்படி, நீங்கள் வீட்டிலிருந்தபடியே, உங்கள் "செக்' கை அனுப்பி பணப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம். எப்படி? உங்கள் வீட்டு கொம்பியூட்டரில் நீங்கள் கையெழுத்திட்ட, "செக்'கை ஸ்கேன் செய்து வங்கிக்கு அனுப்ப வேண்டும். வங்கியிலுள்ள கொம்பியூட்டர் உங்கள் வங்கிக் கணக்கு, கையெழுத்து, தொகை, யாருக்கு அனுப்ப வேண்டும் என்று நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்களோ அவரது வங்கிக் கணக்கு இவற்றை நிமிடத்தில் சரி பார்த்து, உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து அவரது வங்கிக் கணக்குக்கு பணத்தை மாற்றிவிடும்.

இந்த நடைமுறை மூலம் நேரம் மிச்சமாகிறது. இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின், தொடர்ந்து அமெரிக்காவில் வங்கி நடைமுறைகள் குறிப்பாக, "செக்' பரிமாற்றம் மிகவும் சிக்கலான நிலைக்கு உள்ளானது. அதில் மிகவும் தாமதம் ஏற்பட்டது. இதையடுத்து, 2003ல் அமெரிக்க செனட் சபையில், "செக்' பரிமாற்றம் குறித்த விதியில் சில மாற்றங்கள் செய்து, "செக் 21' என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அது, போட்டோ வடிவிலான "செக்'கை ஏற்றுக் கொள்ள வழி வகை செய்தது.

இதன் பிறகு, பல நிறுவனங்கள், ஸ்கேனிங் கருவிகளை நிறுவ ஆரம்பித்தன. இருந்தாலும் இந்த புதிய தொழில்நுட்பத்தை மொபைல் போனில் கொண்டு வருவதற்கு சில தடைகள் உள்ளன. குறிப்பாக கொம்ப்யூட்டரில் பயன்படுத்தும் போது, நெட் திருடர்கள் லவட்டி விடுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது. அதேபோல், மொபைலிலும் நெட் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி விட வாய்ப்புகள் இருப்பதால், அதைத் தடுக்க, புதிய பாதுகாப்பு வழிமுறைகள் குறித்து தொழில்நுட்ப வல்லுனர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கின்றனர்

# இணையம் Internet



இணையம் (**Internet**) என்பது உலக அளவில் பல கணனி வலையமைப்புகளின் கூட்டு இணைப்பு ஆன பெரும் வலையமைப்பைக் குறிக்கும். இவ்விணையத்தில் தரவுப் பறிமாற்றமானது முன்னும் பின்னும் அடையாளம் சேர்க்கப்பட்ட தரவுத்தொடர்களாக (பாக்கெட் சுவிட்சிங்) இணையத்தில் உலா வர செய்யப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி நடைபெறும். இணையம் என்னும் சொல்லானது செப்புக்கம்பிகளினாலும், ஒளிநார் இழைகளினாலும் இணைக்கப்பட்டுள்ள கணினிவலைகளின் பேரிணைப்பைக் குறிக்கும். உலகளாவிய வலை (**world wide web**) என்பது உலகளாவிய முறையில் இணைப்புண்ட கட்டுரைகள், எழுத்துக்கள், ஆவணங்கள், படங்கள், பிற தரவுகள் முதலியவற்றைக் குறிக்கும். எனவே இணையம் என்பது வேறு உலகளாவிய வலை என்பது வேறு. இணையத்தில் பல்லாயிரக்கணக்கான சிறிய வணிக, கல்வி நிறுவன, தனி நபர் மற்றும் அரசு சார் கணனி வலையமைப்புகள் இதன் உறுப்புகளாவன. மின்னஞ்சல், இணைய உரையாடல், மற்றும் ஒரு கட்டுரையில் இருந்து மற்றொன்றிற்கு மீயிணைப்புகள் மூலம் உலவல் வழி தொடர்புபடுத்தப்பட்ட இணையத்தளங்கள் முதலிய சேவைகளையும், உலகளாவிய வலையின் தரவுகளையும் இணையம் தருவிக்கின்றது.

1950-ம் ஆண்டிற்கு அண்மையில் தொடர்பியல் ஆய்வாளர்கள் கணினி மற்றும் பல்வேறு தொலைத்தொடர்பு வலையமைப்பின் பயனர்கள் பொதுவான தொடர்பு மற்றும் தகவல் பரிமாற்றம் கொள்ள ஆவன செய்ய வேண்டும் என எண்ணினர். இதன் விளைவாக மையக் கட்டுப்பாடற்ற வலையமைப்புகள், வரிசைப்படுத்துதல் முறைகள், மற்றும் தரவுப்பொதி நிலைமாற்றம் போன்ற துறைகளில் ஆய்வு செய்யத் துவங்கினர்.

ஜே.சி.ஆர்.லிக்லைடர் **(J.C.R. Licklider)** இணைய தந்தையாக அறியப்படுகிறார் இணையம் - இன்று ஒரு தகவல்

முதலாவது **TCP/IP** முறையிலமைந்த வலையமைப்பானது ஐக்கிய அமெரிக்காவின் நேஷனல் சயன்ஸ் பவுண்டேசனில் ஜனவரி 1 1983 முதல் இயங்க ஆரம்பித்தது.

1990களில் இது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தது. இக்காலப்பகுதியில் உருசியாவில் உள்ள சேர்னோபில் அணுஆலை வெடிப்பு மக்களை விஞ்ஞானிகள் ஒன்றாக இயங்கவேண்டும் என்ற கருத்துக்களை முன்வைத்தது. பிரான்ஸ் ஸ்விட்சலாந்து எல்லையிலிருந்த சேர்னோபிலில் உலகளாவிய வலை பிரசித்தமடைந்தது. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர்

டிம் பேர்ணர்ஸ்-லீ எச்ரிஎம்எல் (**HTML**) மெருகூட்டும் மொழி, எச்ரிரி (**HTT**) என்னும் அனுமதிக்கப்பட்ட அணுகு முறைகளை கொண்ட புதிய அணு ஆய்வுகளுக்கான ஐரோப்பிய அமைப்பின் (**CERN** சேர்ண்) இணையத் தளமானது உருவாக்கப்பட்டது.

ஜுன் 30 2006-ல் உலகம் முழுவதும் நூறு கோடி மக்களுக்கு மேல் இணையத்தை உபயோகம் செய்கிறார்கள். **Internet World Stats**

## இணையம் எப்படி செயல்படுகின்றது

அடிப்படையில் இணையமானது ஒரு வழங்கி (**Server)** மற்றும் வாங்கிக்குமான **(Client)** தகவல் தொடர்பாகும். இந்த தொடர்பானது **TCP/IP** என்னும் இணைய நெறிமுறை மூலம் நடைபெறுகிறது. பின்வரும் நிகழ்வுகள் ஒரு வாங்கிக்கும் வழங்கிக்கும் நடைபெறுவதாக கொள்ளலாம்.

இணையத்தில் உள்ள ஒவ்வொரு கணிப்பொறிக்கும் எண்களைக்கொண்டு **XXX.XXX.XXX.XXX** என்னும் முறையில் அடையாளக்குறியீடு கொடுக்கப்படும். இதனை இணையவிதிமுறை இலக்கம் ( **IP** ) என்பர். இத்தகய இலக்கமுறை மனிதன் கையாள்வது சிரமம் என்பதால் "இடங்குறிப்பி" உரலி இலக்கத்தை குறிக்க பயன் படுகிறது. உரலியை கொண்டு இணையத்தில் உள்ள கோப்பை அணுகும் முறையை , களப் பெயர் முறைமை (**Domain Name System**) என்பர்.

அடுக்குவரிசையான டொமைன் பெயர் முறைமை, மண்டலங்களாக ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு பெயர் செர்வரால் சேவையாற்றப்படுகிறது.

## வாங்கி என்பது ஒரு உலவியை குறிப்பதாகும்.

உலகின் ஒரு மூலையில் இருந்து பயனர் உலவியில், உரலியை (ஒருசீர் வள இடங்குறிப்பி) பதிவிடுகிறார் [ **v.fh. : http://ta.wikipedia.org/w/index.php** ]

உலவியானது உரலியை , தான் நிறுவபட்டிருக்கும் கணணியில் இணையவிதிமுறை இலக்கம் **(IP Number**) தற்காலிக நினைவில் உள்ளதா என தேடுகிறது.இச்சேவையை செய்யும் மென்பொருட்களை பொதுவாக

# *மின்னஞ்சல் முகவரியில் @ என்ற சின்னம் எப்படி வந்தது...?*

இந்த **@** சின்னம் கொம்பியூட்டர் கீ போர்டில் எப்படி இடம் பெற்றது? மொழி வல்லுனர்கள், எப்படி என்பதில், ஒத்துப்போகவில்லை. சிலர் நினைத்தனர், மத்திய காலத்தில் **(Early Middle ages)**, துறவிகள் கையெழுத்துப் பிரதிகளை சிரமத்துடன் படிக்கும்பொழுது லத்தீன் மொழி வார்த்தை **"ad"**, **"at" or "towards" or "By"** என்று பல அர்த்தங்களைக் கொண்டிருப்பதைக் கண்டனர்.

அநேக வல்லுனர்கள் இந்த **@** சின்னம் சமீப காலத்தில், அதாவது 18ஆம் நூற்றாண்டில் புழக்கத்திற்கு வந்ததுதான், பொருட்களின் விலையை குறிப்பிட ஏற்பட்டதுதான் என்று வாதாடினர். அதாவது உதாரணமாக 10 பென்சுக்கு 5 ஆப்பிள் **("5 apples @ 10 pence."** ).மற்றும் ஒரு மொழி வல்லுனர், ஆராய்ச்சியாளர் **Denis Muzerelle** சொல்கிறார், இது ∴ப்ரெஞ்ச், ஜேர்மானிய, வியாபாரிகள் எழுத்து **"a"**யை வேகமாக உச்சரிக்கும் பொழுது ஏற்பட்ட திரிபு என்கிறார்.

ஆனால் ஜுலை மாதம் 2000 ஆண்டில் இத்தாலிய ஆரய்ச்சியாளர் ஒருவர், இந்த சின்னம் **@** 14ஆம் நூற்றாண்டின் வியாபார தஸ்தாவேஜுகளில் இந்தக் குறி காணப்படுவதைக் கண்டுபிடித்தார். இந்தச் சின்னம் ஒரு அளவை **the "anfora," or jar** குறிக்க உபயோகிக்கப்பட்டது என்றார்.

**Giorgio Stabile** 1492ஆம் வருடத்திய லத்தீன் - ஸ்பானிஷ் அகராதியில் **"anfora"** என்பது **"arroba"** ( ஒரு **epWtssit**) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்தார். ஆகையால், 1885ல் வியாபரரீதியான **"a"** (**the "commercial a")** முதல் மாடலான அண்டர்வுட் தட்டச்சு மெஷினில் சேர்க்கப்பட்டது இயற்கையே.

80 வருடங்களுக்குப் பிறகு அங்கிருந்து ஸ்டாண்டெர்ட் கம்ப்யூட்டர் கேரக்டரில் (**Such as ASCII**) இடம் பெயர்ந்துவிட்டது. (**It's therefore natural that, in 1885 the "commercial a" was included on the keyboard of the first model of Underwood typewriter and from there migrated into the standard set of computing characters (such as ASCII) 80 years later. )**

தற்போதைய பிரச்சனை இந்த **@** சின்னத்தை எப்படி உச்சரிப்பது? ஸ்பானியர்கள் இதை **"arroba"** என்றும், ∴ப்ரெஞ்ச்காரர்கள் **"arobase."** என்றும், அமெரிக்கர்களும், பிரிட்டிஷாரும் **"at-sign**." என்றும், ஜேர்மானியர் **("at-Zeichen**"), என்றும், எஸ்தோனியர் **("It-mIrk")** என்றும், ஜப்பானியர் (**"atto maak"**). என்றும் உச்சரிக்கிறார்கள்.

ஆயினும், அதிகமான பாஷைகளில், இந்த சின்னம், பலதரப்பட்ட உருவகம், பொதுப்படையாக, பிராணிகளுக்கு ஒப்பிட்டப்படுகிறது. ஜேர்மானியர், ∴பின்ஸ், ஹங்கேரியன், போல்ஸ், தெற்கு ஆப்பிரிக்கர்கள், இந்தச் சின்னத்தைக் குரங்க்கின் வாலாகப் பார்க்கிறர்கள். மற்றும் சிலர் நத்தைக்கு ஒப்பிடுகிறார்கள். இப்படியாகப் பலவிதம்.

# IP Address என்றால் என்ன?

ஒரு கணனி வலையமைப்பில் அல்லது இணையத்தில் இணைத்திருக்கும் ஒவ்வொரு கணனியும் ஒரு இலக்கத்தைக் கொண்டிருக்கும். அந்த இலக்கத்தை வைத்தே ஒவ்வொரு கணனியும் இனங் காணப்படுகின்றன இதனையே ( **IP Address** ) ஐபி முகவரி எனப்படுகிறது. இங்கு **IP** என்பது **Internet protocol** என்பதைக் குறிக்கிறது.

அந்த இலக்கம் ஒரு வலையமைப்பில் அந்த குறிப்பிட்ட ஒரு கணனியை மட்டுமே குறித்து நிற்கும். இன்னொரு கணினிக்கு அதே இலக்கம் வழங்கப் படமாட்டது.. இதனை ஆங்கிலத்தில் **uniqueness** எனப்படுகிறது.

இணையத்தில் இணையும் ஒவ்வொரு முறையும் எமது கணனிக்கு இந்த ஐபி முகவரியை இணைய சேவை வழங்கும் நிறுவனம் வழங்குகிறது.. இது ஒரு தற்காலிகமான ஐபி முகவரியே. அடுத்த முறை இணையத்தில் இணையும் போது வேறொரு ஐபி முகவரியே நமக்குக் கிடைக்கும்,

இதனை டைனமிக் ஐபி முகவரி **(Dynamic)** எனப்படும். அதேவேளை இணையத்தில் நிரந்தரமாக இணைந்துள்ள சேர்வர் கணினிகள் ஒரு நிலையான **(Static)** ஐபி முகவரியைக் கொண்டிருக்கும்.


ஒரு ஐபி முகவரி 216.27.61.137 எனும் வடிவத்தில் இருக்கும். இது நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒரு புள்ளி கொண்டு இந்த நான்கு பகுதிகளும் பிரிக்கப்படிருக்கும். ஒவ்வொரு பகுதியும் 0 முதல் 255 வரையிலான ஒரு இலக்கமாக இருக்கும்.

ஐபி முகவரிகள் நமது வசதிக்காக தசம் எண்களினாலேயே குறிக்கப்படுவது வழக்கம். எனினும் கணனி இந்த இலக்கங்களை பைனரி வடிவத்திலேயே புரிந்து கொள்கிறது, மேலுள்ள ஐபி முகவரி 11011000.00011011.00111101.10001001 எனும் பைனரி வடிவைப் பெறும். ஐபி முகவரியிலுள்ளா இந்த நான்கு பிரிவுகளையும் ஒரு ஒக்டட் **(Octets)** எனப்படும். பைனரி எண் வடிவில் ஒவ்வொரு இலக்கமும் 8 இடங்களைக் கொண்டிருப்பதால் இவ்வாறு அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு எட்டு இலக்கங்களினதும் கூட்டுத் தொகையாக 32 எனும் இலக்கம் கிடைக்கிறது. இதனாலேயே ஐபி முகவரிகள் 32 பிட் எண் எனக் கருதப்படுகின்றன.

இந்த ஒவ்வொரு எட்டு இலக்கமும் 0 அல்லது 1 எனும் இரு வேறு நிலைகளைக் கொண்டிருக்க முடியுமாதலால் எட்டு இலக்கங்கள் கொண்ட ஒவ்வொரு ஒக்டட் கொண்டும் 28 = 256 வெவ்வேறான சேர்மானங்களை உருவாக்கலாம். எனவே ஒவ்வொரு ஒக்டட்டும் 0 முதல் 255 வரையிலான இலக்கங்களைக் கொண்டிருக்க முடியும்.

இவ்வாறு நான்கு ஒக்டட் சேரும்போது 232 அல்லது 4,294,967,296 வெவ்வேறான் சேர்மானங்களை அல்லது இலக்கங்களைக் உருவாக்கலாம். அதாவாது இந்த முறையினை உபயோகித்து உலகிலுள்ள 4.3 பில்லியன் கணினிகளுக்கு வெவ்வேறான ஐபி முகவரிகளை வழங்கி விடலாம்..

# மௌஸ் பிறந்து, வளர்ந்த கதை




**மனிதனுக்கும் கணினிக்கும் தொடர்பு ஏற்படுத்தும் மௌஸ் பிறந்து, வளர்ந்த கதை**

1968ல் கலி.ஃ.போர்னியாவில் உள்ள ஸ்டான்.ஃ.பார்ட் பல்கலைகழகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மௌஸ் சென்ற வருடம் தன் நாற்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடியது.நாம் தினமும் கையில் வைத்துக்கொண்டு கணனி எனும் இயந்திரத்தை ஆட்டிப் படைக்கின்றோமே, அந்த மௌஸ்ஸைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே மௌஸ் இருந்ததா என்ன?

ஆமாம். டக்லஸ் எங்கெல்பர்ட் என்பவரால் உருவாக்கப்பட்டது. மனிதனுக்கும் கணனிக்கும் இடையே நடக்கும் சம்பாஷணையை சுலபமாக்குவதற்காகத்தான் இது கண்டுபிடிக்கப்பட்டது.

முதல் மௌஸ் மரத்தால் ஆனது. ஒரு பெரிய செவ்வகத்தைப் போல இருக்கும்! டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி ஒரு டெமோ மூலம் தன் மௌஸை உலகிற்கு அறிமுகப்படுத்தினார் டக்லஸ். "டெமோக்களின் அன்னை", அதாவது **'Mother of All Demos'** என்று அனைவராலும் பாராட்டப்பட்டது. ஏ.ஆர்.சி என்று அழைக்கப்படும் **Augmentation Research Centery** வேலை பார்த்தவர்களின் கூட்டு முயற்சியாக இருந்தாலும், அதிக பெயரும் புகழும் பெற்றது என்னவோ டக்லஸ் தான். இன்று ரிச்சி ஸ்ட்ரீட்டில் கிடைக்கும் மௌஸ்களைப் போல் வண்ண வண்ண பட்டன்கள் எல்லாம் அதில் கிடையாது. ஒரேயொரு பட்டன்தான். நிறைய சக்கரங்கள் பொருத்திய மரப்பெட்டி! ஆனால், அன்று அது ஏற்படுத்திய பரபரப்பு அளவில்லாதது. கடந்த டிசம்பர் ஒன்பதாம் தேதி அன்று, வரலாற்றை நினைவு கூறும் விதமாக, மௌஸின் நாற்பதாவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது, அதே ஸ்டான்.ஃ.பார்ட் பல்கலைக்கழகத்தில்.

அது சரி, அது என்ன பெயர் ”மௌஸ்”? டக்லஸ் ஒரு பேட்டியில் சொல்கிறார். ”முதல் மாநாட்டின் சமயம், எங்கள் கையில் அந்த புது கேட்ஜெட் இருந்தது. நாங்கள் அந்த சமயத்தில் அதற்கு என்ன பெயர் வைப்பது என்பதைப் பற்றி எல்லாம் யோசிக்கவே இல்லை. ஒரு சிறிய மரக்கட்டை போல் இருக்கும். அதன் நுனியிலிருந்து ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருந்தது. மாநாட்டில் இருந்த யாரோ ஒருவர் அதைப் பார்த்து பயந்துவிட்டு “எலி.. எலி“ என்று கத்தினார் - கயிற்றை வால் என்று நினைத்துக் கொண்டு! அப்பொழுது வந்த பெயர்தான் மௌஸ்! அன்றிலிருந்து நாங்களும் மௌஸ் என்று அழைக்க ஆரம்பித்துவிட்டோம்.” சில வருடங்களுக்குப் பிறகு, பில் இங்கிலிஷ் **'Computer Aided Display control'** என்ற அவர்தம் புத்தகத்தில் மௌஸ் என்று பெயர் சூட்டுகின்றார்.

அந்த மரப்பெட்டி மெல்ல மெல்ல அழகாக மாறியது. முதல் மாற்றம் வந்தது மௌஸின் சக்கரத்தில்தான். அனைத்து சக்கரங்களையும் அகற்றி விட்டு, எல்லா திசைகளிலும் நகரக் கூடிய ஒரு பந்தை பொருத்தினார்கள். அதன் பிறகு ஆப்டிகல் மௌஸ் வர ஆரம்பித்தது. முதலில், டையோடுகளை பயன்படுத்தினார்கள். தொழில்நுட்பம் வளர வளர சென்சர்களை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். தற்பொழுது இன்ஃப்ரா ரெட் கதிர்வீச்சுகளும், லேசர் கதிர்களும் உபயோகத்தில் இருக்கின்றன.

இன்று மௌஸ் எவ்வளவு தேர்ச்சி அடைந்துவிட்டது என்பதைத்தான் நாம் கண்கூடாகப் பார்க்கின்றோமே. ஒரே ஒரு பட்டனில் ஆரம்பித்தது, இன்று நான்கைந்து பட்டன்கள் வரை வளர்ந்து நிற்கின்றது! இதற்கெல்லாம் நடுவில் “ஆப்பிள்“ கம்பெனி, “நானும் புதிதாக செய்கிறேன்“ என்ற பெயரில் “மைட்டி மௌஸ்” என்றொன்றை விற்கிறது. மற்ற மௌஸ்களைப் போல, வயர்லெஸ் வடிவத்தில் இதுவும் கிடைக்கின்றது. “வால் வெட்டப்பட்ட எலி“ என்று டக்லஸ் விளக்கம் தருவாரோ!!

அது சரி, டக்லஸ் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்? “பூட்ஸ்ட்ராப் இன்ஸ்டிட்யூட்“ என்றொன்றை 1988ல் ஆரம்பித்தார். பிறகு அது “டக் எங்கெல்பர்ட் இன்ஸ்டிட்யூட்“ என பெயர் மாற்றப்பட்டது. டக்லஸின் “கலெக்டிவ் ஐக்யூ“ எண்ணங்களின் மூலம் கணிப்பொறி துறையில் ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கின்றது. கலெக்டிவ் ஐக்யூ என்றால் ”கூட்டாக வேலை பார்ப்பது” என்று அர்த்தமாம்.

டக்லஸ் இன்னும் கலிஃபோர்னியாவில்தான் இருக்கிறார். எண்பத்தி மூன்று வயதிலும் துடிப்பாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார். தன் மனைவி இறந்து பத்து வருடங்களுக்குப் பிறகு, சில மாதங்களுக்கு முன்பு புதிதாக ஒரு பெண்ணை மணந்து கொண்டார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

**(Elate computer Systems)**

# Hosting என்றால் என்ன




வெப்ஹோஸ்டிங் இந்த வார்த்தை பற்றி தெரியாதவர் யாரும் இணையத்தில் ஒரு தளத்தை சொந்தமாக வைத்திருக்க இயலாது. அப்படி என்றால் என்ன? என்ன செய்கிறது வெப் ஹோஸ்டிங்? என்ன வசதிகள் உள்ளன? எல்லாம் தெரிந்து கொள்ளவே இந்தப் பதிவு. ஏதோ என்னால் முடிந்த அளவு தருகிறேன்.

**Web Hosting** என்பது ஒரு தனி நபரோ அல்லது ஒரு நிறுவனமோ தன்னைப் பற்றியோ, தன் நிறுவனத்தைப் பற்றியோ இந்த உலகுக்கு இணையத்தின் மூலம் சொல்ல இது உதவுகிறது. ஒரு குறிப்பிட்ட நிறுவனம் இதை வழங்கும். இது இலவசமாக கூட கிடைக்கிறது.

***இங்கு நான் வெப்ஹோஸ்டிங் என்பதை வெப் சைட் என்று குறிப்பிடுவேன்.***

நீங்கள் கேட்கலாம் ப்ளாக் என்றால் என்ன என்று? அதாவது வலைப்பூ என்பது உங்களைப் பற்றி நீங்கள் எழுதும் டைரி போன்றது. ஆனால் வெப்சைட் என்பது ஒரு புத்தகம் எழுதுவது எனக் கொள்ளலாம். இரண்டிற்கும் பல வித்தியாசங்கள் உள்ளன.

பெரும்பாலும் ப்ளாக் எல்லாம் ஒரே வடிவமைப்பைக் கொண்டிருக்கும். பல மாற்றங்கள் செய்ய இயலாது. ஆனால் வெப்சைட் ஆனது ஒரு ப்ளாக் என்பதை விட மிக அதிக வசதிகளை கொண்டது. இதில் பல மாற்றங்களை நாம் செய்யலாம். தள வடிவமைப்பு என்பது மட்டும் அல்ல, பல்வேறு வசதிகள்.

ஒவ்வொரு வெப்சைட்டும் ஒரு ப்ளாக் கொண்டிருக்கும். உதாரணமாக நீங்கள் ஒரு நிறுவனம் வைத்து உள்ளீர்கள் என்றால், அந்த வெப்சைட் மூலம் உங்கள் நிறுவனம் பற்றிய செய்திகளை சொல்ல வேண்டும். நிறுவனத்தில் நடந்த ஒரு நிகழ்வு பற்றி சொல்வது ப்ளாக். உதாரணம், ஒரு தொலைகாட்சி நிறுவனம் தன்னுடைய நிறுவனம் பற்றி நிகழ்ச்சிகள் பற்றி அதன் தளத்தில் சொல்லி இருக்கும், அதே ஒரு நிகழ்ச்சி ஒரு புதிய வசதி மூலம் உங்களுக்கு கிடைக்கும் என்றால் அதைப் பற்றி சொல்வதற்கு அதன் ப்ளாக் பயன்படுத்தும்.

ஆனால் இன்று வெறும் சொந்த டொமைன் வைத்து எழுதினாலே அது வெப்சைட் என்று சொல்லும் வண்ணம் ஆகிவிட்டது.

இதுவரை வெறும் வெப் சைட் என்றால் என்ன என்று மட்டுமே சொல்லி உள்ளேன். சரி வெப்ஹோஸ்டிங் என்றால் என்ன?

நாம் நம் கணனியில் நமது தகவல்களை சேமித்து வைப்பது போன்றது தான் இது. ஆனால் இதன் அளவு மிக மிக அதிகம்.

அதாவது நாம் எழுதும் உங்கள் வலைப்பூ தகவல்கள் எல்லாம் கூகுள் தனது சொந்த சேர்வர் மூலம் சேமித்து வருகிறது. இது இலவசம். இதே வசதியை நாம் நம் சொந்த செலவில் சேமித்துக் கொள்வது தான் வெப்ஹோஸ்டிங். இதற்கு மாதம் ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவு செலவு ஆகும். செலவை பொறுத்து இடவசதி கிடைக்கும். இங்கு இடவசதி என்பது **MB,GB** என்பதில் குறிப்பிடப்படும். இதில் நமது தளத்தில் நாம் போஸ்ட் செய்பவை ஒரு குறிப்பிட்ட வெப் ஹோஸ்டிங் சேவீஸ் மூலம் ஒரு சேவர் கொண்டு சேமிக்கப்படும். பல்வேறு வகையான ஹோஸ்டிங் வசதிகள் உள்ளன. இலவசம், ஷேர்டு வெப் ஹோஸ்ட், சொந்த ஹோஸ்டிங், இன்னும் பல. ஆனால் இதில் ஷேர்டு ஹோஸ்டிங் தான் அதிகம் பயன்படுத்தப்படுவது. இவை வெப்ஹோஸ்ட் தளங்கள் மூலம் நமக்கு கிடைக்கும். வசதிகள் மட்டும் அல்ல வகைகளும் உள்ளன இதில் இமேஜ் ஹோஸ்டிங், வீடியோ ஹோஸ்டிங், பைல் ஹோஸ்டிங், ப்ளாக் ஹோஸ்டிங், ஈமெயில் ஹோஸ்டிங், ஷாப்பிங் கார்டு சொப்ட்வேயார்.

ஒரு தளத்தை ஹோஸ்ட்க்கு மாற்ற வேண்டும் என்று நீங்கள் என்னும் போது பல விஷயங்களை கருத்தில் கொள்ள வேண்டும். **Bandwidth**, **Disk Space**, **DataBase**, **Number Of Domains**, **Site Creation Tools**, **Programming Language**, **SEO Service** .இவைதான் அந்த விஷயங்க

ஆக்கம் P.JOHNSON **(Elate computer Systems)**

# அத்துமீறி வீட்டுக்குள் பிரவேசிப்பவர்களை வீழ்த்தும் தொழில்நுட்ப தரை




வீட்டிற்குள் காலடியெடுத்து வைப்பவரை தன்னியக்க ரீதியில் குறிப்பிட்ட அறைக்கு வழி நடத்திச் செல்லக் கூடியதும் அத்துமீறி பிரவேசிப்பவர்களை நிலை தடுமாறி விழச் செய்யக்கூடியதுமான அதி நவீன தரை உருவாக்கத்திற்கான உரித்துடைமை தொழில்நுட்ப நிறுவனமான “ஐ.பி.எம்’ க்கு வழங்கப்பட்டுள்ளது. வீட்டில் யார் உள்ளனர்,

அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை தீர்மானிக்கக் கூடிய உணர் கருவிகளை மேற்படி தரை கொண்டமைந்துள்ளது.

“ஸ்மார்ட் புளோர்’ என்ற இந்த தரையானது பாதங்களின் நிறை, வடிவம் மற்றும் அவற்றின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்து அதன் மேற்பரப்பை பயன்படுத்து பவர் வயது வந்தவர்களா, குழந்தைகளா, செல்லப் பிராணிகளா என்பதை துல்லியமாக மதிப்பீடு செய்கிறது.

அடையாளம் தெரியாத விருந்தினர்களையும் இனங்கண்டு கொள்ளும் இத்தரை அத்துமீறி பிரவேசிப்பவர்களை வீழ்த்தி எழுந்திருக்க முடியாது செய்கிறது. ஏற்கனவே தனித்து வாழும் வயோதிபர்களுக்கு உதவும் வகையில் விழுந்தால் எச்சரிக்கை செய்யும் அணியக் கூடிய உணர் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது எப்போது யாழ்ப்பாணம் வந்து யார் தலையை உடைக்க போகுதோ?

# குழாய் வழி பயணம் 6 மணித்தியாலங்களில் உலகை சுற்றி வரலாம்



வேகமான உலகம் இன்னும் வேகமாகவே மாறிக்கொண்டிருக்கின்றது. நவின உலகில் நவீன படைப்புக்கள் பெருகின்கொண்டே போகின்றது. உலகம் உள்ளங் கைக்குள் என்பது நிஜமாகி விட்டது. அதுபோல் உலகம் ஒரு காலத்தில் ஒரு கிராமம் போல் குறுகி விடும் என்றார்கள் அதுவும் வெகு விரைவில் சாத்தியமாகி விடும் போல் தெரிகிறது.

அமைப்பால் அண்மையில் ஒரு புதிய குழாய் வழி போக்கு வரத்திற்கான மாதிரி அமைப்பு நிழல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆறு பயணிகளை ஏற்றிக் செல்லக்கூடிய கூட்டுக் குளிகை வடிவிலான உயிளரடந குழாய் வழி உறிஞ்சி செல்லும் வகையில் வடிவமைக்க உள்ளதாகவும் இதன் வேகம் மணித்தியாலத்திற்கு 6500 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும வகையிலும் அமைக்க உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். இதில் செல்லும் போது வேகத்தை உணர மாட்டார்கள் எனவும் மகிழுந்தில் செல்லும் உணர்வே இருக்கும் எனவும் தெரிவிக்கின்றனர். தொடருந்து, விமான பணயத்தை விடவும் சொகுசாகவும் செலவு குறைந்ததாகவும் இது அமையும் எனவும் நியுயோர்க் நகரத்தில் இருந்து சீனா செல்வதற்கு 2 மணித்தியாலங்கள் மட்டுமே எடுக்கும் எனவும் தெரிவிக்கின்றனர். இந்த போக்குவரத்து உலகம் முழுவதும் அமைக்கப்படுமாக இரந்தால் ஆறு மணித்தியாலங்களில் உலகை வலம் வந்து விடலாமாம். இதற்கான அனுமதியை உலக நாடுகளிடம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுவததகாவும் தெரிவிக்கின்றது

# தேவை



எமது நிறுவனத்திற்கு இக் கணனி சஞ்சிகையை விற்பனை செய்வதற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை நல்ல துடிப்பான இளைஞர் யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தகைமைகள்

1. **A/L** படித்தவர்கள்
2. வயது 19-28
3. ஆண்கள் மோட்டார் சைக்கிள் சாரதி பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்
4. பேச்சாற்றல் உள்ளவர்கள்

விண்ணப்பங்களை கீழ் கண்ட முகவரிக்கோ அல்லது **e mail** முகவரிக்கோ அல்லது நேரிலோ? அனுப்பி வைக்கலாம்

- தபாலில் : **Elate Computer Systems**
  **676 K.K.S Road Jaffna**
- **email : elatecomputer@gmail.com**
- நேரில் **: Elate Computer Systems**
  **1048 K.K.S Road Jaffna**

**ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன**

இங்கே யாழ்பாணத்தை பொறுத்தவரை பல கணனி வல்லுணர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் உள்ளனர் ஆகவே உங்களது ஆக்கத்தை எமக்கு அனுப்பி வைத்தீர்களே ஆனால் உங்களை போல பலரை நாம் உருவாக்க முடியும் பாடசாலை மாணவர்களும் அனுப்பி வைக்கலாம் அனுப்பும் போது உங்கள் தொலைபேசி இலக்கத்தை மறக்காமல் குறிப்பிடவும்

உங்கள் ஆக்கங்கள் வந்தடைய வேண்டிய முகவரி

**Elate Computer Systems**
**1048 K.K.S Road Jaffna**
**Email. elatecomputer@gmail.com**

**நீங்களும் சந்தாதாரராகுங்கள்**



எம்முடன் சந்தாதாரராக இணைவதன் மூலம் உங்கள் வீட்டு வாசற்படியில் 'எலேட்டின் கொம்பியூட்டர் ரைம்ஸ்'இனைப்பெற்றுக் கொள்ளலாம். மாதிரி விண்ணப்ப படிவத்தை நிரப்பி எம்முடன் சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். வளர்ந்து வரும் தகவல் தொழிநுட்ப உலகில் நீங்கள் வாசிக்கத்தவறும் ஒவ்வொரு புத்தகமும் மீளப்பெறமுடியாத இழப்பாகத்தான் இருக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களின் பணத்தை காசோலையாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ அனுப்பி வைக்கலாம் **Elate Computer Systems** என்னும் பெயருக்கு யாழ்ப்பாணம் தபாலகத்தில் மாற்றக்கூடிய விதத்தில் காசுக்கட்டளைகளை அனுப்பி வைக்கவும

எலேட்டின் கொம்பியூட்டர் ரைம்ஸ் சஞ்சிகையின் சந்தாவிபரம்

3 மாதம் 210/=
6 மாதம் 420/=
1 வருடம் 840/=
2 வருடம் 1680/=

மாதிரி விண்ணப்பபடிவம்

பெயர் : ……………………………
முகவரி : …………………………
…………………………
தொ.இல : …………………………..

இத்துடன் ரூபா :…………/= வை காசோலை/ காசுக்கட்டளையாக( இல…………) **Elate Computer Systems** எனும் பெயருக்கு அனுப்பிவைக்கிறேன்

கையொப்பம் ……………………………………………………

உங்களின் படிவம் மற்றும் காசோலை/காசுக்கட்டளைகளை கீழ்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள் அல்லது நேரில் எமது முகவரியில் கொடுக்கலாம்

தபாலில் **Elate Computer Systems**
**676 K.K.S Road Jaffna**
நேரில் **Elate Computer Systems**
**1048 K.K.S Road Jaffna**

# NALIN

**SALES & SERVICE**

- .COMPUTER SALES
- .COMPUTER REPAIRING
- .LAPTOP SALES
- .LAPTOP REPAIRING
- .COMPUTER ACCESSORIES
- .TONER

பேன்ற அனைத்து கணனி சார் நடவடிக்கைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

பரமேஸ்வரா சந்தி யாழ்ப்பாணம்

Hot Line 0777917610

## Abhi Computers Video& photo

அபி கொம்பியூட்டர்ஸ்

வீடியோ அன் போட்டோ



கரிஸ்மா அல்பம்

பிளாஸ்ரிக் அல்பம

டிஜிரல்அல்பம

- .COMPUTER SALES
- .COMPUTER REPAIRING

# 252, 254 நாவலர் வீதி.
இலுப்பையடி சந்தி
யாழ்ப்பாணம்.

0776305290, 0212220402.
0777271220





## Kishoth Net Browsing center



- .Skype Call
- .Net Call
- IDD Call
- .Net Browsing .
- .Fax
- .Photo Copy
- .Scannin
- ,Email
- .Compu Sales
- .Compu Repaiking
- .Phone Re ing
- .Computer Accessories

அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

Brown Road Kaladdi Junction

தொழிநுட்ப கல்லூரி அருகாமை யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு டினா 0771882507

## E-Zone

English Zone

Let's learn better

We teach:

- Perfect spoken English with proper pronunciation
- Easy way of learning grammar
- Audio & Video lessons
- Monthly assignments
- Evaluation & Exams

By; Thushyanthan.A

contact: 0777070711

Elate computer systems
1048 K.K.S Road Jaffna

-your choice can make you better-

This is a service of Arul Foundation